ஸ்ரீ

ஆஞ்சனேயர்துணை.

திருச்சுழி பூமிநாதசுவாமிகோவில்

# துணைமாலையம்மை

ஆடித்தவசு உற்சவ

# வழிநடைச் சிந்து.

இஃது

முதுகுளத்தூர் அஷ்டாவதான வித்வான் மக-ா-ா-ஸ்ரீ
மு. வ. கல்யாணசுந்தரம்பிள்ளையவர்கள்
மாணாக்கர்களிலொருவரான
தல்லாகுளம்
இராமச்சந்திர விலாசம் பங்களாவில் வசிக்கும்
**தி. கோபாலய்யங்கார்**
அவர்களால் இயற்றப்பெற்று

---

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்
இ. மா.
**கோபாலகிருஷ்ணக்கோனாரால்**
மதுரை
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1911. [அணா 1



# அச்சிட்டுத்தரும்படி கேட்டுக்கொண்ட

## கனவான்கள்.

---

திருச்சுளி மிருதங்கபாகவதர் கிருஷ்ணையர்

ஷை யூர் மூக்கன் மேஸ்திரி

ஷை யூர் காதர்மைதீன் ராவுத்தர்

கல்லுமடை மகா-ள-ள-ஸ்ரீ கி. மு. பெத்திநாயக்கர்
குமாரர் ராமசாமிநாயக்கர்

தல்லாகுளம் **T. S.** முத்திருளாண்டி உபாத்தியாயர்

ஷை யூர் பிராஸஸர்வர் ஆலடி முதலியார்.

உ

பரமபதிதுணை.

திருச்சுழி பூமிநாதசுவாமிகோவில்

துணைமாலையம்மை ஆடித்தவசு உற்சவ

# வழிநடைச்சிந்து.

—:(o):—

விநாயகர்துதி.

வெண்பா.

சீரார்திருச்சுழிமா நன்னகரின் றன்சிறப்பை
ஏரார் தமிட்சிந்தா யியம்புதற்கு—பேரார்நற்
றிங்களுடன் கங்கையணி சென்னியன்ப யந்தருள்மா
தங்கமுகன் றாளே சரண்.

தரு-இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ரூபகம்-கண்ணிகள்.

நாலுவேதமூலா தாரநாதனேநமோ
நாதனேநமோ கண நாதனேநமோ
நீனிலந்தனில் தானிகரில்லா யானைமாமுகனே
நாவினிலே மேவிடுமை தேவிமகனே
நான்முகன்வணைந்த (நாலு)

புரமெரித்தோன்புத்ரனைபூபதேநமோ
பூபதேநமோ ஆதி கணபதிநமோ
பூபாலன்றிரு கோபாலன்றுதி புண்யபுருஷனே
பூதலமீதே கிருபையேயருள வா
புகழ்வேதாவணைந்த (நாலு)

விருத்தம்.

மதிதவழ்மாட கூடவளமுயர்சுழிகைதன்னில்
கதிதருந்தலத்தைக்கண்டோர்கருமமும்தீர்ந்துநல்ல

மதிபுடன் வாழ்வாரின்றுமாதம்மன் ஆடிச்சேவை
அதிவிரைவாகப்பார்த்து அன்னமேவருவோம்வாராய்.

கிரிபோய்ப்பார்க்கலாம்பெண்ணே என்ற சதுரகிரிவழிநடைசிந்து
வர்ணமெட்டு.

தவசுபார்த்திடமானே— இரு
தயம்மகிழ்ந்துவாதேனே. (ஆடித்) (தவசு)

துவஜாரோகணத் துடக்கத்தினமே
சுந்தரஞ்சேர் திருச் சுழியில்னமே
அவசியம்நாளை யாகும்விற்பனமே
அதினால்நீவிரைவாகவுன்மனமே
அச்சமுஜுமலே பக்ஷமாயிக்காலே
கச்சணிஅம்மனின் மெச்சுபுகழாடித் (தவசு)

சுந்தரிநல்லாகு ளந்தனிலிராம சந்திரவிலா
சத்திருந்து—நாமும்
சுகமாயுற்சவ மகிமைபார்த்திட அகமதில்
புகழ்சிறந்து—நமது
சொந்ததெய்வ அனு மந்தனைபணிந்து முந்தவினை
களைமறந்து—மிகு
துட்டுரூபாய்களை திட்டமாய்வைத்தகைபெட்டி
எடுத்துக்கோவிறைந்து—உயர்

கந்தங்கமழ்குழல் கத்தையழகியே
கற்பினிற்சிறந்த கனவிவேகியே
பந்துஸ்தனம்வாய்ந்த பாங்குயர்சகியே
பாட்டியம்மாளிடம் வீட்டைஒப்பித்தாடித் (தவசு)

சிங்கமுத்துராம லிங்கசேதுபதி
சிங்காரமண்டபம்பாரே வெகு
சித்துவிளங்கிடும் முத்துக்கருப்பணை
கர்த்தனைப்பணிந்துநேரே வந்து

இங்குஅமெரிக்கன் சங்கத்தாரிஸ்கூலில்
தங்கிவாசிப்போரின்சீரே உந்தன்
இருவிழியாலே கருதியேயுகந்
திருதயங்களிகூரே இது
மங்களஞ்சேர்கோரிமானகரந்தானே
மாசில்லாதபள்ளிவாசலதுதேனே
நங்கையேபெருமாள்நாடாரிடம்மானே
நாமுஞ்சொல்லிக்கொண்டுக்ஷேமமுடன்னுடித் (தவசு)

பதிபுகழுமா மதுரையின்வைகை
நதியில்முல்லையார்தண்ணீர் கல்லு
பாலத்தைதத்திடும் வேகத்தைபார்த்துந்தன்
காலைத்திடமாகப்பெண்ணே ஊன்றி
அதிஉஷாருகத் ததியில்வருவாய்
மதிநுதல்வாய்ந்தகண்ணே உயர்
அற்புதலாலாவின் சத்திரமேயிது
பொற்புருங்கல்யாணைவிண்ணே தாங்கு
வதுபோல்நிற்பதை வஞ்சியேநேரடி
வாகாய்கிளப்புகள் வாய்ந்ததென்ஜோரடி
துதிசெய்பழைய சொக்கர்மீனாளடி
துடர்ந்துவெள்ளைய மடந்தாண்டியாடித் (தவசு)

சீலமதாகவே மேல்மதுரைரிஸ்த்தர்மேலாம்
ஆபீசதுதனையே பார்த்து
சிறப்பாய்குட்சயிட் தெருவினிற்தென்னை
விருக்ஷங்களும்விற்பன்னியே இந்த
ஞாலமீதோங்கிவிண் ணளாவிடுவது
போலதோணுதேஎன்கன்னியே வெகு
நட்புடனுகந்து எட்தபாலாபீசைபெட்புடன்கண்டு
என்பின்னையே வாராய்
பாலர்களும்நார்மெல் பாடசாலையிலே
பாங்குடன்கைத்தொழில் படிக்கமென்மேலே
காலைமணியேழு கரெக்ட்டாயிக்காலே
கண்டு ஸ்கூலில் புகும் உன்னதம் பாராடித் (தவசு)

பத்தினிமங்கம்மாள் சத்திரத்தமர்ந்தபக்தர்
மற்றுறையும்பாங்கி உயர்
நேட்டிவ்காலேஜியின் நேர்மையும்பார்
எஸ். ஐ. ஆர். ரயில்ஸ்டேஷனைநோங்கி இதோ
நத்திவந்தோமிந்த உத்தமஸ்திரீகள்பால்
சற்றமர்வாய்மோகனுங்கி யானும்
நாடியேவேகமாய் ஓடிப்போய்டிக்கட்டு
ஜோடியாகத்தானும்வாங்கி வருவேன்

பத்திரம் பத்திரம் பணப்பெட்டிமாதே
பாங்காய் டிக்கட்டு கைபற்றினேனிப்போதே
சிற்றிடையாளென்பின் சென்றுவாதப்பாதே
சீக்கிரம்ரயிலை நோக்கியமர்ந்தாடி (தவசு)

நன்றாய் உட்கார்பதினைன்று ஆச்சுமணி
சென்று இஞ்சின்கோர்வைதானே செய்தார்
நங்கையே மதுரை ஜெங்கஷனைத்தாண்டினோம்
அங்கிருப்பது செந்தேனே பசு
குன்றமேபாதிரி தென்றலுக்காகவே
வந்துறை பங்களாவானே மேவி
கொண்டிருக்குந்தன்மை கண்டுகொள்வாயடி
வண்டு விழிமடமானே இது

தென்பரங்குன்றமே சிறந்தஸ்தலமே
திக்குநோக்கித் தெண்டனிட்டு கொள்நலமே
துன்பங்கள்வெகு சுருக்கிலகனுமே
சொற்பஸ்டேஷன் கப்பலூரைத்தாண்டி ஆடித் (தவசு)

மங்களஞ்சேர் திருமங்கலமென்பது
இங்கு நம்முன்னமேஜோராய் தோற்றும்
மகிமைதனை இச்செகமதனிலே
புகழொணுதிதோ நேராய் புகை
தங்கும்தாருமெயில் எங்கனமுஞ்சுற்றி
வெங்கதிகொண்டதி சீராய் யேதுக்

தந்திரமதனை உந்தனுக்குரைக்க
எந்தனுல் கூடாதிப்புறமாய் புகழ்
தங்கும் செவர்கோட்டை தானிதுவேநேரு
தையலேஉனது சந்தேகங்கள் கூரு
இங்கு கள்ளிகுடியேதாண்டினோம் சீரு
யேரிழை குக்காலஞ்சேரியை பாராடித் (தவசு)

மட்டில்லா விருதுபட்டிவந்தோம்
ரயில்விட்டுக் கீழிறங்குமயிலே இந்த
மாஸ்டரிடந்தனில் சீட்டைக்கொடுத்து நீ
கேட்டைக்கடந்துவா குயிலே வெகு
கெட்டியான இந்த கட்டடத்தைச்சற்று
கிட்டசென்றறிவாய் ஒயிலே அந்த
கெடியாரத்தைநொடியினில் மணி
அடிக்கலாச் சுறூர்தையலே நீயும்
வாசுருக்கினில்பஞ் சாபீசினில்சங்கு
வாங்கிடாதூதிடும் வண்மைபாராயங்கு
நேசியேஇது தண்ணீர்பந்தலே இங்கு
நிகரில்நாடாரின் விடுதிநேராடித் (தவசு)

செந்தமிழாய்ந்திடும்அந்தணர்களின்றன்
சொந்தக் கிளப்பிது ஆகும் உந்தன்
சித்தமகிழ் டிராமாக்கொட்டகையும் கோரி
கட்டடம் வெகு சீராகும் பார்
இந்தாசுபத்திரிவந்தோம் நற்பாதையே
சிந்தையாய் நாமிருபேரும் செல்வோம்
ஏராளமாக வியாபாரங்கள் கடைக்
காரர்கள்செய்யும் விநோதம் காண்பாய்
இந்ததெப்பக்குளம் என்னசிங்காரமே
இங்குஜவுளி மாளிகை பெருக்கமே
பிந்தாதேவாமர பேட்டையழகுமே
பெட்புடன்னோர் செங்கல் காளவாயீதாடித் (தவசு)

அற்புதசுழினு கற்கு யெகும்வழி
விற்புருவமுருந்தேவி இது
ஆருமேநீயதிவேகமதாகவே
சோகமின்றி என்பின் மேவி வாடி
பொற்புவள்ளிக்குளம் இப்பதிதானடி
ஒப்பில்லாதாலயஸ் தாவி பார்
பொட்டெனவேநட மட்டில்லாத திருக்
கட்டழகியே நீதாவி வரப்
பற்பலநினைவை பாங்கியேகொள்ளாதே
பாலவனங்கேட்டு பாதையில் கில்லாதே
கற்பினியேஜமீன் கச்சேரிசெல்லாதே
காலுஞ்சோறுதெனக் கழருதே ஆடித் (தவசு)

பாங்குறுந்தருக்கள் ஓங்கிவளர்ந்துசூழ்
தீங்கில் குளம்கூபம் நேரு அதில்
பண்பாயிறங்கியே தண்ணீரருந்தியே
பெண்ணே நீயும்யிளைப்பாரு வெகு
பூங்குழல்மாதர்தெம் பாங்குபாடிக்களை
ஆங்குவெட்டுவதென் சீரு வந்தோம்
புளியம்பட்டியிங்கெழிலாய் பாவாத்தும்
தொழிலையுன்கண்ணுற்பாரு பொன்னே
வாங்கியே வித்திடும் வணிகர்வீடிது
வாசியோகியர்கள் வாழும்மடமது
நோங்கருப்புக்கோட்டை ரோட்டினில்மனது
நொந்திடாதேகியே தென்சுழிகையாடித் (தவசு)

அன்னமே சந்தணம் பன்னீரு தாம்பூலம்
இன்னமுதுகனிகாயும் விற்கும்
அந்தமுள்ளகடை விந்தையும்ரதமும்
வந்துபார்த்திடுவாய் நீயும் வெகு
உன்னத கமீனசர் தன்னாலயமது
முன்னந்தணார்வீதி நேயம் காந்த

ஊசிசேர்தந்திபா பிசென்றிதனையே
பேசிடுவாரது ஞாயம் அதோ
அன்னசத்திரம் அடுத்துத் தெப்பக்குளம்
ஆதிசிவன்கோவிலண்டினும் உன்னுளம்
தன்னில்மகிழ்ந்து சரணம்செய்யூர்வளம்
சாற்றினேன்தென்சுழி ரோட்டைநாடி ஆடித் (தவசு)

இத்தினம்பிள்ளையார்நத்தமீதிருந்து
ஒத்தைக்குதிரைச்சாரட்டிலே அதோ
எரிபேயன்புடன் மீறியேவேகமாய்
சிரறுப்புக்கோட்டை ரோட்டிலே உல்லா
சத்துடனேவாரூர் மெத்தவே கீர்த்திகள்
பெற்றவர் ஆதிகுழ்நாட்டிலே மிகு
சற்குணன் வெள்ளைவீரப்பநாயக்கரின்
நற்பதம்பணி இக்காட்டிலே வெகு
சித்திரகிள்ளைகள் சிட்டுபுறாக்களும்
செம்பூத்துடன்காடை சேர்ந்துகுயில்களும்
நத்திக்கதுவாலி நாணவந்தான்களும்
நடந்துஇரைகள் அருந்துதற்றுடித் (தவசு)

தேட்டமாய் தென்சுழி நாட்டிற்கேகுமிந்த
ரோட்டின்வழி வெகுதூரம் ஆகும்
தென்புலியூர்மீதுசென்றால் நேர்பாதையாம்
நின்றிடாமல் நீயின்னேரம் வாராய்
வாட்டமில்நாரைகள் கூட்டம் பாப்பாங்குள
நீற்றிலுலாவுஞ் சிங்காரம் இங்கு
வந்துயர்சாமியார் நந்தவனம் மடம்
விந்தையைநேர்ந்து விசாரம் இன்றி
கோட்டி செம்மட்டியை கூசாதுநடந்து
கோரிப்புலியூரில் யேரியையுகந்து
வாட்டமில்லாதிவ்வூர் ஊற்றுநீருருந்து
வாடிசென்றேனல்லபல் ஊடேகுடாக்காடித் (தவசு)

கன்னல்தென்னை பிலாவன்னி ஆல்சோலைசூழ்
　　தென்புலியூரெனுஞ்க்ஷேத்திரம்　　இதை
காசிக்கிணையாகவே சாற்றலாமடி
　　மாசில்லாசகல சாஸ்த்ரம்　　புகழ்
உன்னதசித்தரின் பொன்னடிபணிவாய்
　　முன்வினைநீங்குமுன் நேத்ரம்　　உற்று
உலகுவீடுகள் அழகழகாக
　　இலகுதிங்கென் விசித்ரம்　　பார்

　　　அம்பலம் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளைசீர்
　　　அகமும்கடைகள் அமைந்ததுதோநேர்
　　　நண்பன்கந்தசாமிநாயக்கர் வீட்டில்மோர்
　　　நாமருந்திவெகு மேன்மைசூழியாடித்　　(தவசு)

ஊரணிகடந்தோம் வாராய் காளியம்மன்
　　யோர்பதமலர் போற்றி　　மிகு
உருஉலவிய திருசிதம்பர
　　பெருமாளின்குள நேர்த்தி　　காண்பாய்
பார்புகழ்தெம்பாலை ஊரென்பததுவே
　　நேரிழையுன்மனந்தேற்றி　　அதோ
பாராய்சிட்டில்குண்டு நேராய்த்தமிழ்ப்பாடி
　　ஓரமாய்ச்செல்வோங்கண்ணாட்டி　　இதோ

　　யோராளமாகிய கார்வேலாமரங்கள்
　　எண்ணெண்ணுதிச்சுழி கண்மாயினோரங்கள்
　　பூராய்நிறைந்தன புராவினினங்கள்
　　பூஞ்சிட்டிகொக்குள்ளான் தேன்குருட்டுப்பார்த்தாடி (தவசு)

---

பூமிமேச்சிடும் அண்ணாமலைக்கோர்துணை என்ற மெட்டு.

எந்தன்முன்பாயனு　　மந்தன்கோவிலிதோ　　பாரடி
மிகுசீரடி　　வெகுபேரடி　　அங்கு
வந்துவணங்கிடும்விந்தைகண்டுன்குறைகூறடி　　தீர்ப்பாரடி

சீராரண்ணுமலை செட்டியாரின்சொந்த கோட்டையே
வண்டிபேட்டையே வெகுமாட்டையே இதில்
நேராகக்கட்டிப்புல்மாறுதிடுஞ்ஜனநாட்டமே பாரென்கூட்டமே

ஆசைக்கண்ணேகுயி லோசைப்பெண்ணேமயி லன்னமே
விற்ப்பன்னமே பசுஞ்சொற்னமே குரு
பூஜைமடமிதுவாசுருக்கிம்மேற்குபக்கமே வேண்டாந்தர்க்கமே

சரணஞ்செய்வாய்துரை சாமிசாஸ்திரியார் பாதமே
அக்ரகாரமே மிக்கவேதமே வெகு
நிரணயமாயிங்குநிகழ்த்துகிறார்ஆசுபத்திரி நீயும் உற்றரி

பெண்ணேமுனிசிபு ஷண்முகம்பிள்ளையின் இல்லமே
இவர்சொல்லுமே எங்குஞ்செல்லுமே துதி
பண்ணுவாய்பாப்பயா பக்தரின்பாதத்தை பாங்கியேமோகனாங்கியே

பூவில்வாழ்மைந்தர்கள் பயிலுமிங்கிலீஷ்பள்ளி கூடமே
விசேடமே மதிநாடுமே எந்தன்
றேவியே துரோபதைகோவில்தபாலாபீஸ்பாரடி என்னஜோரடி

மைவிழிரெண்டையும் பையவேமிரட்டி பார்த்திடும்
ஜாடைகாட்டிடும் மையல்மூட்டிடும் பாராய்
தையலெனுந்தாசிஜானகியாளுடபனுக்கை மினுமினுக்கை

தண்டமிழ்வாய்த்தவை குண்டம்பிள்ளைவீடு பாரியே
பார்தேரியே கச்சேரியே இதன்
அண்டைஸப்ரிஜிஸ்தர்ஆபீஸண்ணுமலைசெட்டியார் அன்றுகட்டிய

இந்தநல்பஜனை கூடமாலோஜனை யேதுமே
யிப்போதுமே எப்போதுமே யின்றி
சுந்தரிபார்சுப்ரமண்யஞ்செட்டியார்தன்விடுதி காண்பாய்ஜடுதி

அரிவையெனுந்தாசி ஆனந்தத்தின்கொண்டை சொருக்கை
நகைப்பெருக்கை வெல்வெற்றவிக்கை தன்னை
பரிவுடன்பார்விப்ரர்பாங்குடன் வாழக்ரகாரமே வினைமாருமே

வேதியர்தங்கட்கு சாதம்அழிக்கும்வி சித்திரம்
தர்ம்மசத்திரம் இதில்இத்தினம வெகு
சாதுரியகிஷ்ணன்சாப்புகொடுக்கும்மத்தளமே பாரித்தினமே

பூதலம்புகள்ராம நாதபுரமதில் வாசனே
பிரகாசனே சேதுராஜனே பூமி
நர்தன்கலியாணநன்மைக்கமைத்தஇம்மண்டபம் காண்பாய்சுபம்

எழிலுடனேதிருச் சுழிசுற்றிகாவல்செய் தீரனே
மகாசூரனே புயவீரனே வெகு
நளினமாய்வெள்ளையநாயக்கன்வருகின்றமாகூழியே பார்கைவிச்சையே

கோதையேபார்தெப்ப குளமையமண்டபங் கோவிலே
இந்தபூவிலே புகழ்நாவாலே சொல்ல
போதாதேஞாபகம்ஆனாலும்சன்னதிபுகுவோம் மகிழ்வோம்.

---

அள்ளி அள்ளிகுடிக்கும் பள்ளநீர்ஓடையாம் என்ற மெட்டு.

---

அன்னமேபூமிநாதன் சன்னதிக்குள்ளேநீ
உன்னதமாகவேவாடி என்பின்கூடி (உன்)
அற்புதகம்பம் நிற்பதென்சிரு
பொற்புரும்நந்தி நற்பதங்கோரு (அன்)

அச்சமில்லாதுமன பட்சமுடன்பிர
தக்ஷணமாகவருவோம் மனமகிழ்வோம் (த)
அடுக்கடுக்காய் படிக்கல்கள்சாய்ந்
திருக்குதேகால் சருக்காதேரு (அ)

துலங்குஞ்சரவிளக்கும் இலங்கும்குத்திவிளக்கும்
அலங்கிர்தகுடைவிளக்கும் மிகஜொலிக்கும் (அ)
சுத்துமதிலில் சித்திரம்வெகு
சுந்தரமாய்வ ரைந்திருப்பதுபார் (து)

சரசியேளங்குமருள் தரும்பூமிநாதனே
சாதிக்கின்றார்நற்சேவையே நேர்பூவையே (சர)
சந்ததம் அவர்கந்தமலர்த்தாள்வந்தனைசெய்வாய்சிந்தைமகிழ்வாய் (ச

அடுத்துவாடிவிளைறவாய் நடுத்தெருவென்னுமோர்
கடைத்தெருகளைநாமுமே கண்ணுலுமே (க)
அன்னமேகண்டு அம்மன்தவசை
முன்னாடிசென்று இன்றுள்சேவிப்போம் (அ)

வைக்கில்பாண்டியம்பிள்ளை தக்கமாளிகையை
முக்கியமாகத்திரும்பி பார்விரும்பி (மு)
வருகிறார்போலீஸ் காரர்கள்பிற்றிற்கு
வஞ்சிநீபயம் நெஞ்சிற்கொள்ளாதே (வ)

வண்ணவிழிசூரியக் கண்ணானனுந்தாசி
பெண்மணியாளின்பங்களா இருகண்களால் (பெ)
வந்திதோநேர்நேர் விந்தையைபார்பார்
உந்தனுடைய சந்தேகங்கூர்கூர் (வ)

பூமிபுகழும்குரு சாமிமேஸ்திரியார்
நேமமுடன்செய்ரதமே அலங்கிர்தமே (வா)
புகலராகு அகம்நைய்குவன்
புரிவேன்கடைத் தெருவரிசை (பூ)

லட்டுபூந்திசிலேபி மிட்டாயிவற்கமும்
மட்டில்பலசரக்குகள் விற்குங்கடைகள் (ம)
நங்கையேஎன்ன நாகரீகமாய்
இங்கமைந்தன யேகமதாக (ல)

தானிகரில்லாதிரு மேனிசெட்டியாரின்
ஜவுளிமாளிகைசீர்த்தியை பார்நேர்த்தியை (ஜ)
தக்ககாய்கரி மிக்கவேகூரு
கட்டிகடையில் விற்குறாய் (தா)

பார்க்கபார்க்கவேபலே ஷோக்காயிருக்குதே
மூக்கன்மேஸ்திரியுடனும் காதர்மொய்தீனும் (மூ)
பற்றுதலாக பட்டுதாவணி
சட்டைரவிக்கை தைக்குருரடி (பா)

சத்தியவான் தங்கையா கிட்டங்கிபழக்கடை
ஷாப்பிதோவங்தோமேபேணி சந்தையூரணி (ச)
தழுக்குடனே கிழக்குநோக்கு
தையலேல்பார்மூக் கையாகடையை. (ச)

வஞ்சியேமகமதியர் மிஞ்சுபுகள்பள்ளி
வாசல்வண்டிபேட்டைதானே பார்செந்தேனே (வா)
வாருயர்தவஸ் ஏகிச்சேவிக்க
யேகமாய்ஜனம் போகின்றனர்பார் (வா)

நேசிஇதுதான்அரைக் காசம்மன்கோவிலே
மாசில்லய்யனூர்சன்னதி நீயுந்துதி (மா)
நின்றிடாதுவா குண்டாங்மண்டபம்
கண்டம்மன்தவஸ் இன்றுகாணுவோம் (நே)

சுருக்கினில்வாடிஜன நெருக்கம்பாராயம்மன்
இருக்கும்தவசையுற்றிட புண்யம்பெற்றிட (இ)
சூழ்ந்தாரனேகம் பேர்கள்வீணுதம்
சுந்தரியன்னை விந்தையென்சொல்வேன் (சு)

---

கும்மி.

அன்னமேபாராய் துணைமாலே கழுத்
தலங்கிர்தபொன்மணிமாலே
என்னமாய் ஜொலிக்குதிவ்வேலைக் கிணை
எங்குமுண்டோ காதிற்கல்லோலே
செங்கதிர்போலே பிரகாசம் அதை
சேர்ந்த சிமிக்கியும் உல்லாசம்

அங்கனுலகினிலிவ்வேஷம் கொண்ட
அம்மனைபோற்றினவர் தோஷம்
தீருமே உலகுரத்தினமே வைத்த
சித்ரமூக்குத்தி பாரித்தினமே
மார்பில் பதைக்கமாமுத்தினமே ஒளி
மங்கிடச்செய்கிறதேயனமே.
தேவியை வர்ணிக்க எப்போது மாதி
சேடன் மனதுமே ஒப்பாது
யாவையே நீதடைசெப்பாது அம்மன்
பாதம்பணியவா தப்பாது

---

ரீத்தாபிரைசூடி என்ற மேட்டு.

---

அம்மாஉனதருளேபுரி யாதிதிருமேனி
பெம்மானிருதயமேமகிழ் பிரியாவுயர்வடிவே
இம்மானிலம் புகழத்தவம் இயற்றும்பராசத்தி
அம்மாமதிதனைநேர்முக அனையேமலர்ச்சரணி.

சோலைவளமுலகுதிருச் சுழிகாபுரிதனிலே
ஆலவிடமுண்டோனருள் அடையத்திருத்தவஞ்செய்
வாலைதுணைமாலையபி ராமிசிவகாமி
பாலன் ஸ்ரீகோபாலன்நவில் பனுவல்க்கருள்புரிவாய்.

---

விருத்தம்.

---

வாழிபூவாழி யாதிமறைகளும் மறையோரெல்லாம்
வாழிதென்சுழிகைவாழும் மாதுணைமாலைநோம்பும்
வாழியிச்சிந்தையன்பாய் வாசிப்போர் கேட்போர்யாரும்
வாழிகோபாலன் அன்னோன் வம்சமும் வாழிமாதே.

முற்றுப்பெற்றது.

---

உ

கன்னிச்சமீன் சரபம் மகா-ள-ள-ஸ்ரீ

## உடுமலை முத்துச்சாமிக் கவிராயரவர்கள் பதங்கள்

தற்காலத்தில் வழங்கும் நாகரீக வர்ணமெட்டுகளால் நன்கமைந்தது.
கற்கண்டோ மதமிஞ்ஞு கனிரசமோ பாகோ என்றவாக்கியம். உலகப்
பிரசித்திபெற்ற நமது கவிராயரவர்கள் வாக்கிற்கே என்பது நேயரனைவரும்
அறிந்த விஷயமே புதிதாய் அச்சிட்டு சொற்ப காபிகளே தயாரிலிருக்கின்
றது. முந்தினவர்க்கன்றி பிந்தினவர்களுக்ககப்படுவதரிது. விலை அணு 4.

## லீலாவதி சுலோசனா சரித்திரம்.

இதுவரை ஏற்பட்டுள்ள டிராமா சரித்திரங்களிலெல்லாம் சிறந்தது
இதுவே என்பது புஸ்தகத்தை வாங்கி வாசிக்கும் நேயரனைவரும்அறிந்திருக்
கலாம். மகா-ள-ள-ஸ்ரீ முத்துச்சாமிக்கவிராயரவர்களால் புதிய வர்ண
மெட்டில் இயற்றி டிராமாக்கம்பெனியார் பலரும்பாடிவரும் சிருங்காரமான
பாடல்கள் இதில் ஏராளமாய் சேர்க்கப்பட்டுள்ளன. விலை அணு 6.

## ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள் மீது
## நூதன இந்துஸ்தான் பஜனைகீர்த்தனை.

மகா-ள-ள-ஸ்ரீ கலியாணசுந்தரம்பிள்ளையவர்களாலியற்றியது.
இதில் தற்காலம் வழங்கிவரும் இந்துஸ்தான் வர்ணமெட்டுகளில்
பஜனைகளுக்குரிய பக்திரஸமான கீர்த்தனைகளும் முக்கியமான திருப்புகழ்
பாடல்களும், பார்ஸி இந்துஸ்தான் பாட்டுகளும் அனேகம் அடங்கியுள்
ளது. முதற்பாகம் விலை ரூ. 0—2—0.

## ஷை இரண்டாம் பாகம்.

இதில் சிவபஜனைகளுக்குரிய கீர்த்தனைகளும் முதற்பாகத்திலில்லாத
திருப்புகழ்பாடல்களும் விஷ்ணுபஜனைக்குரிய இனியவர்ண மெட்டுகளா
லமைத்த ஸ்ரீகோபாலகிருஷ்ண நாமசங்கீர்த்தனங்களும் விஷ்ணுபேரில்
திருப்புகழ் பாடல்களும் பார்ஸிநூதன இந்துஸ்தான் பாடல்களும் சேர்த்
துள்ளது. விலை ரூ 0—2—0

## விடாநகைப்பட விளைவிக்கும் விநோத விகடசிந்தாமணி.

நேயர்கள்இதுவரை விகடபுஸ்தகங்கள் அநேகம்பார்த்திருக்கலாம் ஆயினும்
இதைப்போல பூராவும்விகடமாகஇராதென்பது திண்ணம். ரூ 0—4—0.

## கானமோகன டி. ஏ. இராஜாமணியம்மாள்
## பார்ஸி நவரச மனமோஹன மோகின்ராஜன் சரித்திரம்.

சிருங்காரமான தர்க்கங்களடங்கியது. விலை ரூ 0—1—0

| | |
|---|---|
| கோமாளிப்பாட்டு | 0—0—6 |
| நல்லதங்காள் சரித்திரம் முதல்பாகம் படத்துடன் | 0—2—0 |
| ஷை இரண்டாம் பாகம் படத்துடன் | 0—2—0 |

எமது மேல்விலாசம்,

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
ரப்பர் ஸ்டாம்பு மேக்கர் & புக்ஸெல்லர்,
புதுமண்டபம், மதுரை.